<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 11/2025**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய நிஷார் பானு **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 03.04.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | நிஷார் பானு | | |
| Father /Husband Name | : | ஜாகீர் உசேன் | Court | : |
| Village | : | பொறையார் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 46/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

24.01.2012 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியின் பெயரில் உள்ள கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.05.2009 தேதியிட்ட வாதியின் கிரய முன்னவர் முகமது கபீர் பெயரில் உள்ள கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.10.2023 தேதியிட்ட கணினி பட்டா **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.12.2023 தேதியிட்ட கணினி பட்டா **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.